சிறுவர்

# அமுதம்

19.11 .97

கிண்ணம்: 8

எண்ணம்:11



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDERLITERARISCHES MAGAZIN

"சாதிப் பிரிவுகள் சொல்லி- அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வர்
நீதிப் பிரிவுகள் செய்வர்- அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
-சுப்பிரமணிய பாரதி-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

வாசிப்பது மனதில் நிற்பதை விடவும், எழுதுவது மனதில் பதிந்து விடும். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்னும் முதுமொழி எழுத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்துகின்றது. அறிவு வளர்ச்சிக்கு, வாசிப்பதும், எழுதுவதும் துணையாகின்றன. அறிவு வளர்ச்சியால் சிந்தனை விரிவடைகின்றது.

வயது வளர வளர அறிவும், அனுபவமும் வளர்கின்றது அல்லவா? உதாரணமாக, நாயைப் பற்றி எழுதும்போது,

நாய் ஒரு மிருகம்.

நாய் வீட்டைக் காக்கும்.

நாய் நன்றியுள்ள மிருகம். என்று சின்ன வயதில் எழுதிய நீங்கள், இரண்டு மூன்று வருடங்களின் பின் நாயைப் பற்றி எழுதும் போது, நாய் தன் எசமானனுக்கு விசுவாசமாக இருக்கும். பாரதியார் தனது பாப்பாப் பாட்டில்,
"வாலைக் குழைத்து வரும் நாய்தான்

அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா"

என்று

பாடியிருக்கிறார் என்று அழகான வசனமாக எழுதுவீர்கள்.

ஒரு புத்தகத்தில், ஒரு விஷயத்தை வாசிப்பதை விடவும், பார்த்து எழுதி வாருங்கள். அதனால் எழுத்துக்கள் பிழையில்லாமல் எழுத வரும். (ழ,ள,ல), (ற,ர), (ந,ண,) எல்லாமே தான். எழுத்துகள் அழகாக எழுத வரும். எழுதுவது மனதில் பதிந்து விடும். எழுதுவதற்கு இத்தகைய ஆற்றல் உண்டு.

இன்னொரு விஷயத்தையும் உங்களுக்குச் சொல்ல வேண்டும். சிறுவர் அமுதத்தின் "வினாவிடைப்போட்டி, சொற்களைக் கண்டு பிடியுங்கள் போன்றவற்றில் பங்கு பற்றி வருபவர்கள் குறைந்து விட்டது. உங்களின் வயதும், படிப்பும் கூடி விட்டது காரணமாக இருக்கலாம். கல்விக்கு வயது தடையில்லை.

சரி, உங்களால் முடியவில்லை. உங்கள் சகோதரர்கள், சகோதரிகளைப் பங்கு பற்றச் செய்யுங்கள். ஆக்கங்களை எழுதுங்கள். வினாவிடைப்போட்டி, சொற்களைக் கண்டு பிடியுங்கள் போன்றவற்றை நீங்களே தயாரித்து அனுப்புங்கள். அது உங்களுக்கும், எங்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும் அல்லவா?

-ஆசிரியை-

# குற்றம் என்னுடையது!



கல்பனா தன் அறைக்குள் தனது மோதிரத்தைத் தேடிக் கொண்டிருந்தாள். மோதிரத்தை சென்ற வாரம் திருமண வரவேற்பு ஒன்றுக்குப் போய் வந்த பின் படிக்கும் மேசை

லாச்சிக்குள் தானே கழற்றி வைத்தாள். அது இப்போதான் ஞாபகம் வந்தது. காணவில்லை. யார் எடுத்திருப்பார்கள். வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்யும் சுப்புவின் மகன் மணி தான் படிப்பதற்குப் புத்தகம் வாங்க வருவான். அவன் எடுத்திருப்பானோ! கல்பனாவுக்கு விபரீதமான எண்ணங்கள் தோன்றின.

அவனைப் போய் எப்படி, என் பேனாவை எடுத்தாயா? என்று கேட்க முடியும்!. சுப்புவுக்குத் தெரிந்தால் சண்டைக்கு வந்து விடுவான். பிறகு அம்மா அப்பாவுக்குத் தெரிந்தால் வீட்டில் அவர்களின் தண்டனைக்கு உட்பட நேருமே...... என்ன செய்வது என்று கல்கனாவுக்குப் புரியவேயில்லை.

பாடசாலையில் மணியைக் கவனித்தாள். புதிய பேனா வைத்திருந்தான். கல்பனா மணியிடம் கேட்டாள். தனக்கு தன் அப்பா வாங்கித் தந்ததாகக் கூறினான். இரண்டு வாரங்கள் சென்றன. பாடசாலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். வீட்டுக்குள் சித்தப்பாவும், சித்தப்பாவின் மகன் சேகரும் வந்திருந்தான். சேகர் ஏன் வந்திருக்கிறான்?

சித்தப்பா தேவையில்லாமல் பாடசாலை நாட்களில் கூட்டி வருவதில்லையே! யோசித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

அம்மா கல்பனாவைக் கூப்பிட்டாள். இரகசியமாக, சித்தப்பா, சேகருக்குப் பாடசாலைத் தேர்வுக்குப் பணம் வேண்டுமாம். என்னிடம் இப்போது பணம் ஏதுமில்லை. உன் மோதிரத்தை எடுத்துக் கொண்டு வா. அவசரத்துக்குக் கொடுப்போம். அடகு வைத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளட்டும். பிறகு மோதிரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.'' என்றாள். கல்பனாவுக்குத் திகைப்பாகி விட்டது. ஏதும் தோன்றாமல் நின்று விட்டாள்.

பின் மெதுவாக மோதிரத்தைக் காணவில்லை என்று சொன்னாள். மோதிரம் இங்கே இருக்கிறது. நீ சேகருக்குக் கொடுத்தாயாமே'' என்றார் சித்தப்பா. பின் சேகர் களவெடுத்த விஷயத்தைச் சித்தப்பா கூறினார். அவன் கள்ளன் இல்லை. சின்னப்பிள்ளை. விளையாட்டாக எடுத்து விட்டான். நீ, பெரியவள் இல்லையா?. மோதிரத்தைப் கவனமாக வைக்காதது உன் தவறல்லவா?

அது தான் போகட்டும். தேடிக் காணதபோது அம்மாவிடம் சொல்லி இருக்கலாம். இல்லையா? இரண்டு தவறுகளைச் செய்திருக்கிறாயே என்று சித்தப்பா அவளைக் கடிந்து கொண்டார்.

கல்பனா அழுது கொண்டே, இல்லைச் சித்தப்பா, மூன்று தவறு செய்து விட்டேன். மணி ஏழையாக இருந்ததனால் அவன் மோதிரத்தை எடுத்திருப்பான் என்று நினைத்து விட்டேன். நான் செய்தது மிகப் பெரிய குற்றங்கள். எனக்கு என்ன தண்டனை தர வேண்டுமோ, தாருங்கள். என்றாள். சித்தப்பா அவளை அணைத்துக் கொண்டே, சோக்கிரதீஸின் பொன்மொழியைப் போல,... உன்னையே நீ அறிந்து கொண்டாயல்லவா?. அது போதும். அழாதே என்று தேற்றினார்.

-பாமினி அருள்வரதன்.-

பொறுத்திருங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியமும் அதற்கான நன்மையைக் காலம் கடந்தாவது அழைத்துக் கொண்டு வரும்.

# ஆபத்தில் உதவா நண்பன்



கண்ணனும் பொன்னனும் நண்பர்களாம்-அவர்
காட்டு மார்க்கம் போனார்களாம்
போகும்போது வழியினிலே- ஒரு
பொல்லாக் கரடியைக் கண்டனராம்

அருகில் நின்ற மரத்தினிலே -கண்ணன்
அவசரமாகவே ஏறிக் கொண்டான்
மரத்தினில் ஏறிப் பழக்கம் இல்லை-பொன்னன்
மல்லாந்து தரையில் படுத்துக் கொண்டு

'சிக்'கென மூச்சை அடக்கிக் கொண்டான்-அவன்
செத்த பிணமென ஆகி விட்டான்
அக்கணம் கரடியும் அங்கு வந்து-நன்றாய்
அவனை முகத்தினில் மோந்து பார்த்து

அவனைப் பிணமென நினைத்து விட்டு-பின்
அகன்றது. அந்த இடத்தை விட்டு
கவனமாய் மரத்தினில் இருந்தபடி-கண்ணன்
கண்டான் கரடியும் போவதையே

பின்னர் மரத்தை விட்டிறங்கி-பேசப்
பெரிதும் ஆவலாய் அருகில் வந்து
'கரடி சொன்னது என்ன? உனக்கு-பொன்னா
சொல்லுவாய்! என்றவன் கேட்டானே!

ஆபத்தில் உதவா நண்பன் ,அவனை- என்றும்
நம்பாதே என்று கரடி. சொன்னதென்றான்
பாவம்! கண்ணனும் தலை குனிந்தே- பேசாப்
பாவையைப் போலவே நின்றிட்டான்.

-கிரிசாந் மனோரஞ்சிதராஜா-

**அவனவனுக்கு உரியதை அவனவனுக்கு வழங்குவதே நீதி என்பதன் கருத்து.**

**-அரிஸ்ரோட்டில்-**

## சொற்களைக் கண்டு பிரயுங்கள் முறைவு

| | | | |
|---|---|---|---|
| இட-வல | வல-இடம் | பழி | பலகை |
| மருத்துவன் | அந்தணன் | கம் | கை |
| கபடி | துடி | வகி | எள் |
| படி | தடி | கிளி | கடலை |
| மா | மணன் | வலை | வளி |
| மாடி | வார் | உப்பு | தடி |
| சம்பவம் | வடு | துடி | வடி |
| சேதி | கடவுள் | வதம் | பசி |
| நடு | கடமை | பதி | கடம் |
| நடுவர் | மையல் | பண் | மை |
| எகிப்து | களி | நன்மை | நண்பன் |
| கன்னம் | வகை | மை | குழு |
| புளி | குளம் | மா | கம் |
| கல் | படு | மடு | வட்டி |
| மை | சில | தடி | பதுங்கு |
| கை | சிலம்பு | கழு | சேது |
| உச்சி | புதிது | கழுதை | பல |
| உச்சிப்பொழுது | பீடம் | சேர் | பலகணி |
| பொழுது | தகழி | பசி | கணி |
| துணி | கழி | அத்திவாரம் | வாதி |
| புது | | அத்தி | |
| துதி | மேலி-கீழ் | வாரம் | |
| சில | மஞ்சள் | | |
| கதவு | புகை | கீழி-மேல் | |
| பீலி | கை | பல | |

முடிவு:

1.விஜிதா விநாயகமூர்த்தி -Danmark
2.கிரிசாந் மனோரஞ்சிதராஜா-Münster
3.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா-Münster
4.ஜெயமாலாஇரத்தினசபாபதி-Eschelbronn
5.ஜெயதீபாஇரத்தினசபாபதி-Eschelbronn
6.மோகன் இரத்தினசபாபதி-Eschelbronn
7.திவாகரன் ரவிக்குமார்-Danmark
8.தர்சன் சரவணபவன்-Solingen
9.கௌரிசங்கர்சரவணபவன்-Solingen

♥ சொற்களைக் கண்டு பிடியுங்கள் பகுதியின் இம்முறைக்கான பரிசு திவாகரன் ரவிக்குமாருக்குக் கிடைக்கிறது. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் புத்தகம் இவருக்குப் பரிசாகக் கிடைக்கிறது.

மனிதர்கள் மட்டும் தான் குறட்டை விட்டுத் தூங்குவதில்லை. குதிரை, நாய், பூனை எல்லாமே குறட்டை விடும். டொல்பின், திமிங்கிலம் போன்ற கடல் வாழ்வனவும் குறட்டை விட்டு நித்திரை செய்யும்.

ஒன்று சேருங்கள்



சின்னச் சின்னக் குழந்தைகளே
ஒன்று சேருங்கள்!
சித்தெறும்பைப் போல நீங்கள்
சேர்ந்து வாழுங்கள்!

கள்ளமில்லா உள்ளத்தோடு
களித்துச் சிரியுங்கள்!
தெள்ளு தமிழ் மொழியில் நீங்கள்
தேர்ச்சி கொள்ளுங்கள்!

அன்புடனே எல்லோரையும்
அழைத்துப் பேசுங்கள்!
பண்புடைய பிள்ளைகளாய்
பாரில் வாழுங்கள்.

—புலவர் பூங்கோதை—

தன்னம்பிக்கை, உங்கள் சுயமதிப்பை உயர்த்துகிறது. சவால்களைச் சந்திக்க உங்களைத் தயார்ப் படுத்துகின்றது. வெற்றியைப் பெற வைக்கிறது.

— ஸ்ரேபிள் —

பார்த்தவள், மூன்றாம் மாதக் கணக்கைப் பார்த்துக் கொண்டீர்களே, அம்மா'' என்றாள். அம்மாவும் பார்த்து விட்டுத் தன் பிழையை ஒப்புக் கொண்டாள். பின் அம்மா ஐந்தாம் மாதக் கணக்கு மட்டமாக இருபத்திமூன்று ரூபாய்.'' என்று பணத்தை எடுத்துக் கொடுத்தாள். ''இல்லை. முப்பத்தைந்து ரூபாய் எழுபது சதம்'' என்றாள் பொன்னம்மா.

அம்மா திகைத்து நின்றாள். பொன்னம்மாவின் கணக்கு எழுதிய கொப்பியை வாங்கிப் பார்த்த குமார் சிரித்தான். பின் ''எதிர் வீட்டுக் கலாவின் கணக்கை அம்மாவிடம் சொல்கிறீர்களே! பொன்னம்மா'' என்றான். பொன்னம்மாவும் கணக்கைப் பார்த்தாள். மூவருமே சிரித்துக் கொண்டனர்.

எந்த விதமான பேதமும் இல்லாமல் பொதுக்கல்வி அனைவருக்கும் கிடைக்கும் விதத்தில் உருவாக்குவதே ஓர் அரசின் முதற் கொள்கையாக இருக்க வேண்டும்.

— நெப்போலியன் —



சார்லிக்கும் மனைவியான லிதாவுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்படத் தொடங்கியது. இதனால் சார்லி ஸ்ரூடியோவிலும், டக்ளஸின் வீட்டிலும் இரவுகளில் தங்கினார். வேலைகள் காரணமாகத் தன் வீட்டுக்கு வந்து போக நேரமிருப்பதில்லை என்பது போல வெளி உலகத்துக்குக் காட்டிக் கொண்டார். இவ்வேளையில் சார்லி ஆண்குழந்தை ஒன்றிற்குத் தந்தையானார்.

குழந்தைப்பாசம் சார்லியை மீண்டும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடச் செய்தது.. ஆனாலும் நீடிக்கவில்லை. லிதா இன்னொரு ஆண் குழந்தைக்கும் தாயானாள். லிதாவின் தாயார் தன்

உறவினரை எல்லாம் வீட்டோடு வைத்துக் கொண்டு விருந்துக்களும், கொண்டாட்டங்களும் நடத்தினார். லிதாவும் இதற்கு ஒத்துழைத்தார். குழந்தைகளின் மேல் அன்புடன் இருந்த சார்லி, மனைவியை வெறுக்கத் தொடங்கினார்.

1926ம் ஆண்டு இறுதியில், சார்லியும், லிதாவும் சட்டப்படி விவாகரத்துப் பெற்றுக் கொண்டனர். சார்லி தன் சுயசரிதையில் லிதாவைத் திருமணம் செய்தது பற்றியோ, தனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் லிதா சிறிது காலத்தின் பின், தான் அவசரப் பட்டு விவாகரத்துப் பெற்று விட்டேன் என்று கவலைப் பட்டாள். சார்லியின் இரண்டாவது மணவாழ்க்கை மூன்றாண்டுக் காலமே நீடித்தது.

அதைப் பற்றி எவ்விதமான கவலையும் இல்லாமலே சார்லி தன்வாழ்க்கையைக் கொண்டு செலுத்தினார்.

-தொடரும்-

# சோதிடனும் அரசனும்



கண்ணனூர் என்னும் நகரத்தில் சோதிடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். சோதிடம் கேட்டு வருபவர்களுக்கு அவன் ஏதோ சொல்லி அனுப்புவான். கூடுதலாக சொல்லியவை சரியாக நடந்து விடும். அவனுக்கே தான் சொல்லியவை உண்மைதானா என்று தெரியாது. தான் சொல்லிவை பலித்து விடுவது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

ஒருநாள் காலை நேரத்தில், சோதிடனின் வீட்டு வாசலில் அரண்மனைச் சேவகன் வந்து நின்றான். அரசர் உடனடியாக அழைத்து வரும்படி

கூறியதாகவும் சொன்னான். சோதிடனுக்கு தன்னை அறியாமல் பயமாக இருந்தது. அவனிடம் கேட்கவும் முடியவில்லை. அரண்மனைச் செய்திகள் சேவகனுக்கு எங்கே தெரியப் போகின்றது!

அரண்மனைக்குள் அந்தப்புரத்துக்குள் சென்றபோது தான் சோதிடனுக்கு விஷயம் தெரிந்தது. அரசனின் விருப்பத்துக்குரிய இளையராணி கடுமையான நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். சோதிடம் பார்ப்பதற்காகவே தன்னை அழைத்திருந்தது அவனுக்குப் புரிந்தது. இளையராணி மேல் கொண்ட அன்பினால் பட்டத்துராணியை அரசன் கஷ்டப்படுத்துவது நகரத்து மக்கள் எல்லோருக்கும் தெரிந்தது தான்.

அது சோதிடனுக்கும் தெரிந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. இன்னும் இரண்டு வாரத்துக்குள் இளையராணி இறந்து விடுவார் என்று சோதிடன் சொல்லி விட்டுத் திரும்பி விட்டான். அவன் சொல்லியபடியே இளையராணி இறந்து போனாள். அரசனுக்கோ, தன்னையும் மீறிச் சோதிடனிடம் கோபம் வந்தது. சோதிடனைச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான்.

சோதிடன் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனாலும் அரசனின் கோபத்தின் வேகம் தணியவில்லை. சோதிடனைத் தன் கையாலேயே சிரச்சேதம் செய்ய வேண்டுமென எண்ணினான். அதனை நிறைவேற்றுவதற்காக, அரசன் சென்ற போது சோதிடன் எல்லோரோடும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான். இது அரசனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தான் திட்டம் போட்டிருந்தபடியே சோதிடன் கூறினான். "அரசே, நான் ஏன் கவலைப்பட வேண்டும். என் மரணம் இயற்கையானதாக இருக்க வேண்டும் என்பது நியதி. அப்படி இல்லாமல் செயற்கை மரணமானால், நான் இறந்த இரண்டாம் நாளில் அதற்குக் காரணமானவரும் இறந்து விடுவார். ஆனபடியால் நான் இறந்து இரண்டாம் நாளில் நீங்களும் இறந்து விடுவீர்கள்." என்றான்.

அரசர் சோதிடனை உடனேயே விடுவித்து விட்டார். சோதிடன் தான் சாமர்த்தியமாகத் தப்பிக் கொண்டதை எண்ணி, மனதுக்குள் சிரித்துக் கொண்டே வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

## சின்னக் குருவி பறக்கிறது.....



சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது

வெய்யில் நன்றாய் எறிக்கிறது
வெளியில் பயறு காய்கிறது

பையக் குருவி வருகிறது
 பயற்றுப் பாயை அடைகிறது

என்னைப் பார்த்துக் கதைக்கிறது
 ஏதோ கேள்வி கேட்கிறது
இன்னும் நாங்கள் பழகாத
 இனிய சொற்கள் சொல்கிறது

பயறு வேண்டும் என்கிறதோ?
 பசிக்கிறது பார் என்கிறதோ?
வயிறு சிறிய தானாலும்
 வருத்தம் பெரிது என்கிறதோ?

பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ!
 பத்துப் பயறு வீசுவதால்?
கொஞ்சம் கிள்ளி எறிகின்றேன்
 கொத்திக் கொத்தித் தின்கிறது

பிறகு நிமிர்ந்து சிரிக்கிறது
 பின்னால் திரும்பிப் பார்க்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
 சின்னக் குருவி பறக்கிறது!

ஈழத்துக் கவிஞர் அமரர் மஹாகவியின் பாடலை அம்மா சொல்ல எழுதி அனுப்பியவர் பி.அங்கதன்.

# வியப்புச் செய்திகள்.

## லிங்கனும் கென்னடியும்:





ஆபிரகாம் லிங்கன் 1860இல் அமெரிக்க ஜனாதிபதியானார்.

ஜோன் கென்னடி 1960இல் அமெரிக்க ஜனாதிபதியானார்.

லிங்கனும் கென்னடியும் அமெரிக்க சிறுபான்மை மக்களின் உரிமைக்காகவும், நாட்டின் பெருமைக்காகவும் பாடுபட்டவர்கள்.

லிங்கனின் காரியதரிசியின் பெயர் கென்னடி. கென்னடியின் காரியதரிசியின் பெயர் லிங்கன்.

லிங்கனின் துணை ஜனாதிபதியின் பெயர் ஜாக்ஸன். கென்னடியின் துணை ஜனாதிபதியின்

பெயர் ஜான்ஸன். ஜாக்ஸன் 1808ம் ஆண்டிலும், ஜான்ஸன் 1908ம் ஆண்டிலும் பிறந்தார்கள்.

லிங்கனும் கென்னடியும் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார்கள். இருவரின் இறந்த நாள் வெள்ளிக்கிழமையாகும்.

லிங்கன் -Lincoln, கென்னடி -Kennedy. பெயர்களைத் தமிழில் எழுதினால் நான்கு எழுத்து. ஆங்கிலத்தில் எழுதினால் ஏழு எழுத்து.

துணை ஜனாதிபதிகளின் முழுப் பெயர்கள் ஆங்கிலத்தில் எழுதினால் Andrew Jackson- ஆன்ட்ரு ஜாக்ஸன், Lyndon Johnson- லிண்டன் ஜான்ஸன் பதின்மூன்று எழுத்துக்கள் வருகின்றன.

லிங்கனைக் கொலை செய்தவனின் பெயர் Jhon Wilk Booth- ஜான் வில்க்ஸ் பூத், கென்னடியைக் கொலை செய்தவன் பெயர் Lee Harvi Asvald- லீ ஹார்வி ஆஸ்வால்ட், ஆங்கில எழுத்துக்களை எண்ணினால் பதின்னான்கு எழுத்துக்கள்.

நூறு ஆண்டுகள் இடையே வாழ்ந்த ஜனாதிபதிகளின் வாழ்க்கையின் ஒற்றுமைகள் இவை. வியப்பாக இல்லையா!

## நெப்போலியனும் ஹிட்லரும்:





நெப்போலியன் 1760இல் பிறந்தார். ஹிட்லர் 1889இல் பிறந்தார்.

நெப்போலியன் 1804இல் ஆட்சிக்கு வந்தார். ஹிட்லர் 1933இல் ஆட்சிக்கு வந்தார்.

நெப்போலியன் வீயன்னாவைக் 1809இல் கைப்பற்றினார். ஹிட்லர் வீயன்னாவைக் 1938இல் கைப்பற்றினார்.

நெப்போலியன் ரஷ்யாவுடன் 1812ம் ஆண்டு போரிட்டார். ஹிட்லர் ரஷ்யாவுடன் 1941ம் ஆண்டுபோரிட்டார்.

நெப்போலியன் 1816இல் தோற்கடிக்கப் பட்டார். ஹிட்லர் 1945இல் தோற்கடிக்கப் பட்டார்.

இருவருக்கும் இடையிலான சம்பவங்களின் இடைப்பட்ட வருடங்கள் நூற்றி இருபத்தொன்பது ஆகும்.

விந்தையாக இல்லையா!

"போரின் போது தீர்மானம், தோல்வியின் போது பணிய மறுத்தல், வெற்றியின் போது பெருந்தன்மை, அமைதியின் போது நல்லெண்ணம்

– வின்ஸ்டன் சேர்ச்சில் –

வாழ்க்கையின் முக்கிய நோக்கம் வெற்றி பெறுவதில் இல்லை. சிறப்பாகப் போராடுவதிலும், முயற்சி செய்வதிலும் தான் இருக்கிறது.

– கூடபெர்டின் –

# வினாவிடைப் போட்டி

1. இங்கிலாந்துப் பிரதமரான வின்ஸ்டன் சேர்ச்சில், இரண்டாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத் தளபதி மட்டுமல்ல. சிறந்த அரசியல்வாதி. ஆனாலும் இவருக்கு இதற்காகத்தான் நோபல் பரிசு கிடைத்தது.
*இல்லை, பல்லக்கு, நம்பிக்கை, பாக்கியம், ஐயம், அம்புலி.*

2.ஹிந்தியில் எடுக்கப்பட்ட தமிழ்ப் படமொன்றிற்கு பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்டு, வீடியோ கஸெட்டுக்களும் அரசினால் கைப்பெற்றப் பட்டது. இந்தப் படம் எது.
*உரோமர், ஜாக்கிரதை.*

3.பூவாமல் காய்க்கும் மரம் இது. இதை வைத்துப் பழமொழி கூட இருக்கிறதே!.
*அமுதம், பத்திரிகை, சந்தி.*

4.யானையை எந்தக் காலில் கட்டுவார்கள்?
*பிழை, கன்னம், பானம், சங்கு, காப்பு, பால்.*

5.தன் நிறத்தை அடிக்கடி மாற்றும் சக்தி கொண்ட பிராணி இது. சந்தர்ப்பவாதிகளை இதன் பெயரைச் சொல்லி அழைப்பார்கள்.
*பவளம், துச்சம், பாற்சோறு, பந்து, தியானம்.*

முடிவு திகதி: 05.02.97

## திருமண மோதிரம்

திருமணச் சடங்குகளில் திருமண மோதிரம் அணிவது எல்லோரும் அறிந்தது தான். இதைத் தொடக்கியவர்கள் எகிப்து நாட்டினர் தான். ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்து கிறீஸ்தவர்களிடம் வழக்கத்துக்கு வந்தது.

கிரேக்கர்கள் மோதிர விரலின் நரம்புகள் இதயத்துக்குச் செல்லுவதாக நம்பினார்கள். இதனால் அன்புக்கு அடையாளமாக மோதிரம் அணிவதை ஏற்றுக் கொண்டார்கள்.பழைய எமது புராணக் கதைகளிலும் அன்புக்கு அடையாளமாக மோதிரம் அணிவித்ததாக வரலாறு உண்டு.

நீங்கள் நேரே இலட்சியத்தை நோக்கிச் செல்வது என்று தீர்மானித்தால் அதனால் என்ன நஷ்டமானாலும், என்ன கஷ்டம் வந்தாலும், எத்தனை கசப்பான விஷயங்களைச் சந்திக்க வேண்டி இருந்தாலும், நேரே செல்ல உறுதி கொண்டால் எவ்வளவோ தொல்லைகள் குறையும். அச்சமின்றி உறுதியோடு நில்லுங்கள். தடைகள் எல்லாம் மறைந்து விடும்.

— ஸ்ரீ அன்னை —

தேரோட்டியின் மகனான கர்னன், அரச குமாரனான அருச்சுனனுக்கு நிகராக வீரனாக அருச்சுனன் செய்த வித்தைகள் எல்லாவற்றிலும், மிகத் திறமையாகச் செய்து காட்டியது சபையோரை ஆச்சரியக் கடலில் ஆழ்த்தியது. அதே வேளையில் அரச குமாரனான அருச்சுனனைப் போட்டிக்கு அழைத்தது சபையோரைத் திகைப்பில் ஆழ்த்தியது. சிறிது நேரம் சபையில் அமைதி நிலவியது.

அமைதியைத் துரியோதனன் கலைத்தான். மிகவும் மகிழ்ச்சியுடன் எழுந்து சென்று கர்னனைக் கட்டிக் கொண்டான். பின் "நீ, கேட்டது சரியானது தான்." என்று கூறினான். இதைச் சற்றும் எதிர்பார்க்காத அருச்சுனனுக்குக் கோபம் வந்தது. "நீ என் எதிரியா? உன்னுடன் சண்டையிடுவதற்கு." என்றான். அதற்குக் கர்னன் "என்னுடன் போரிட்டால் உன் உயிர் போய் விடும் என்று பயப்படுகின்றாயா?" என்று அருச்சுனனைக்

கேட்டதும், அருச்சுனனுக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது.

அரசகுமாரர்களின் அரங்கேற்ற வேளையில் அசம்பாவிதம் ஏதும் நேர்ந்து விடக் கூடாது என்னும் எண்ணத்தில், அரசகுருவான கிருபாச்சாரியார் எழுந்து, "அருச்சுனன் அரசனின் மகன். அவனுடன் போட்டி போடுவதற்கு, அத்தகைய தகைமை உள்ளவனே, சமர் செய்யலாம். தேரோட்டியின் வளர்ப்பு மகன், தாய், தந்தை அறியாதவன், எப்படிப் போட்டிக்கு அழைக்கலாம். கர்னன் அருச்சுனனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்." என்று கூறினார்.

அதைக் கேட்ட துரியோதனன் சபையினரை நோக்கி, "திறமையான கல்வி உள்ளவர்களுக்கும், அழகான பெண்களுக்கும், கேட்டதை மறுக்காது கொடுக்கும் கொடையாளிகளுக்கும், புகழ் பெற்ற வீரர்களுக்கும், ஒழுக்கமும், ஞானமும் கொண்ட முனிவர்கள், துறவிகள் போன்றவர்களுக்கும் குலம் என்பது கிடையாது. அவர்கள் கௌரவத்துக் குரியவர்கள். இதை நீங்கள் தானே

எங்களுக்குக் கற்பித்திருக்கிறீர்கள்." என்று கர்னனுக்காக வாதாடினான்.

"இதற்கு மேலும் நீங்கள் கர்னனை வீரனென ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவனுக்குரிய தகுதியை நானே கொடுக்கின்றேன்." என்று கூறிக் கொண்டது மட்டுமல்லாமல், சபையினர் எல்லோரும் எதிர்பார்க்காத காரியம் ஒன்றைச் செய்தான். கர்னனுடைய தலையில் அரசர்களுக்குரிய முடியை அணிவித்தான். அவனைத் தங்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அங்கதேசத்துக்கு அரசன் எனப் பிரகடனப் படுத்தினான்.

பின் அவனைத் தன் இருக்கையிலேயே சமமாக அமரச் செய்தான். அன்று முதல் இருவரும் இணை பிரியாத நண்பர்களாக விளங்கினார்கள். அதே வேளையில்,

அருச்சுனனுக்கும் கர்னனுக்கும் இடையில் மிகுந்த பகை உணர்வு தோன்றியது. அந்தப்புரப் பெண்களோடு நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற குந்திதேவிக்கு அடிக்கடி கர்னனின் வேதனைப் பட்ட முகம் தோன்றிக் கவலைப் பட வைத்தது. அது ஏன் என்று தெரியாமலே கண் கலங்கினாள் குந்திதேவி.


-தொடரும்-

தற்போதைய நிலைமைகள் எப்படி இருந்தாலும், நம்பிக்கை, மகிழ்ச்சி, கொஞ்சம் அக்கறை, ஆகிய மனநிலைகளுடன் செய்ய ஆரம்பித்தால் ஒவ்வொரு தனி மனிதனும் வாழ்வில் உயர முடியும்.

-லேனா தமிழ்வாணன்-

இரத்தம், உழைப்பு, கண்ணீர், வியர்வை, இவை தவிர தருவதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை.

– வின்ஸ்டன் சேர்ச்சில் –




**NEKTAR FÜR KINDER**